வட மாகாணத்திலே தனிச் சிறப்பான சேவை
Sunlight Dry cleaners
(Opp. Bus Stand)
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

தரமான போட்டோஸ்ரட் பிரதி உடனுக்குடன் தெளிவாகப் பெற்றுக்கொள்ள
Sunlight Dry cleaners
(பஸ்நிலைய முன்பாக)
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு தை மீ 5 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 7 (18-01-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-52

துப்பாக்கிச் சூட்டுக்கு நால்வர் பலி
வீடுகள் எரிப்பு, உடைமைகள் நாசம்

# குரும்பசிட்டி ஏழாலையில் இராணுவ அத்துமீறல்

## ஏழு மணி நேரத் தேடுதலில் பல குறிச்சிகள் துவம்சம்

— பலாலி செய்தியாளர் எஸ். கே. ராஜ்

பலாலி, ஜன. 18

**குரும்பசிட்டியிலும் ஏழாலையிலும் அவற்றைச் சூழ உள்ள குறிச்சிகளிலும் நேற்று அதிகாலை தொடக்கம் சுமார் ஏழு மணித்தியாலங்கள் இராணுவத்தினர் பெரும் அட்டகாசம் புரிந்தனர்.**

தேடுதல் வேட்டை நடத்த வந்தவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நால்வர் மரணமானர்கள். அவர்களில் ஒருவர் ஏழாலையைச் சேர்ந்தவர் மற்றைய மூவரும் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்கள்.

நேற்றைய சம்பவத்தில் வீடுகள் எரிக்கப்பட்டன. பல வீடுகளில் பெறுமதியான பொருள்கள் அடித்து நொருக்கிச் சேதமாக்கப்பட்டன. துணி வகைகள் மற்றும் பல பொருள்கள் வீடுகளுக்கு முன்னல் வைத்து எரிக்கப்பட்டன.

ஹெலிக்கொப்டர் தாக்குதலின் போது சுமார் நூறு வீடுகள் சேதமடைந்தன.

நண்பகல் 12 மணி வரை இந்த அட்டகாசம் நீடித்தது.

இராணுவம் வந்து திரும்பிச் செல்லும் வரை நிகழ்ந்த துப்பாக்கி வேட்டுகள், ஹெலிக்கொப்டர் சூடுகள் மக்களின் அவலக் குரல்கள் அப்பகுதி முழுவதையும் நேற்று ஆட்கொண்டிருந்தன.

இச் சம்பவங்களினுல் அப்பகுதி நேற்று சோக மயமாகக் காட்சி அளித்தது.

நேற்று நடந்த பயங்கரம் பற்றி எமது பலாலி செய்தியாளர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

நேற்று அதிகாலை பலாலி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் விமான நிலையம் ஊடாக வயாவிளான் நோக்கி வந்தனர். காலை 5-30 மணி அளவில் பலாலிக்கும் வயாவிளானுக்கும் இடையில் உள்ள பனை வெளியில் துப்பாக்கிகளுடன் படுத்திருந்த இராணுவத்தினர் கவச வாகனங்கள் வந்து சேர்ந்ததும் தமது நடை பவனியை ஆரம்பித்தனர். பின்னல் கவச வாகனங்கள் வந்து கொண்டிருந்தன.

சுமார் 300 பேர்வரை (4 ம் பக்கம் பார்க்க)

## 68 வயது முதியவருக்கு நடந்த பயங்கரம்

பலாலி, ஜன.18

இராணுவம் வந்த போது எனது கணவர் பனை ஒன்றின் பின்னல் பதுங்கி இருந்தார். அவரைக் கண்ட இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டனர்.

திருமதி குமாரவேலு மேற்கண்டவாறு கூறினர்.

தமது கணவர் வைத்திலிங்கம் குமாரவேலுவுக்கு (வயது 68) நடந்த பயங்கரம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது கணவர் ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர்.

இராணுவத்துக்குப் பயந்து வீட்டின் பின்புறமுள்ள வாழைத் தோட்டத்தின் ஊடாகக் கணவர் சென்றுர்.

பின்னல் வேலியைப் பிரித்து இராணுவம் வருவதைக்கண்ட அவர் பனை ஒன்றுக்குள் பதுங்க முனைந்தார்.

இதனைக் கண்ட இராணுவச் சிப்பாய் ஒருவன் சரமாரியாகச் சுட்டான்.

அவர் துடிதுடித்து மரணமானர்.

இப்படி மனைவி கூறினர்.

வீட்டின் பின்புறத்தில் 9 சூடுகள் காணப்பட்டன.

## மரணமான நால்வர் விவரம்

பலாலி, ஜன. 18

நேற்று ஏழாலையிலும் குரும்பசிட்டியிலும் மரணமான நால்வர் வருமாறு;-

கதிராமு கந்தவனம் (65வயது) ஏழாலை.

துரைராசா சிவகுமார் 26 வயது) குரும்பசிட்டி.

குட்டித்தம்பி இரத்தினம் (50 வயது) குரும்பசிட்டி.

வைத்திலிங்கம் குமாரவேலு (68 வயது) குரும்பசிட்டி.

இவர் ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்.

இவர்களைத்தவிர ஏழு பேர் காயமடைந்து தெல்லிப்பளை, யாழ்ப்பாணம், தனியார் மருத்துவ மனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

முச்சந்திமுரளி



முகமூடியளுக்கு வந்த மவுசும் மகிமையும் இப்ப ஆருக்கு வந்திருக்கு. அவைதானே இப்ப பல பேருக்கு சித்திர—புத்திரனர் வேலை பாக்கினம்......!

## கடைக்குள் இறந்துகிடந்தார்

பலாலி, ஜன. 18

இறந்த மற்றவர் குட்டித்தம்பி இரத்தினம் (வயது 50) கடையுரிமையாளர்.

அவர் பற்றி உறவினர் ஒருவர் கூறியதாவது:-

இராணுவம் சென்றதும் இரத்தினம் கடைக்குள் ஒளிந்திருக்கின்றுர் என நாம் நினைத்து அழைத்தோம்.

கதவு திறக்கவில்லை. பின்பக்கத்தால் சென்று பார்த்தோம்.

பனம் செலாகையால் அடைத்த மண்ணெண்ணெய் வைக்கும் கொட்டிலுக்குள் இரத்த வெள்ளத்தில் அவர் கிடந்தார்.

மூன்று சூட்டுக் காயங்கள் சுவரில் காணப்பட்டன.

இப்படி உறவினர் தெரிவித்தார்.

★ பாதுகாப்பு வலயத்தால் வந்த பாதிப்பு

# அரச அலுவலகங்கள் இயங்கமுடியாத நிலை

## ஊழியர் வேலைக்கு வரத் தயக்கம்; நாளாந்த வாழ்க்கை பாதிப்பு
### தபால் விநியோகம் முற்ருக ஸ்தம்பிதம்

— உதயன் அலுவலகப் பிரதம செய்தியாளர்

யாழ்ப்பாணம், ஜன.18

**யாழ்ப்பாண நகரத்தில் அரசாங்க அலுவலகங்கள் இயங்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது.**

கோட்டை இராணுவ முகாமைச் சுற்றிப் பாதுகாப்பு வலயம் உண்டாக்கப்பட்டதால் அந்தப் பகுதிக்குள் இருக்கும் அரச அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் வேலைக்கு வரத் தயக்கம் காட்டுகின்றனர்.

பாதுகாப்பு வலயத்தால் மக்களின் நாளாந்த வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதம தபால் நிலையத்தில் நேற்று வேலை எதுவும் நடைபெற வில்லை. அதனுல் தபால் விநியோகம் முற்ருக ஸ்தம்பித்தது.

இராணுவமுகாம்களைச் சுற்றியுள்ள 1000மீட்டர் பிரதேசம் பாதுகாப்புவலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பிரகடனத்தின் கீழ் யாழ்கோட்டை இராணுவ முகாமில் இருந்து 1000 மீட்டர் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக இருக்கும்.

இப்பிரதேசத்தினுள் அரச அலுவலகங்கள், வங்கிகள்,அரசாங்க ஆஸ்பத்திரி, பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள்,பஸ் நிலையம் முதலியன வருகின்றன.

பாதுகாப்பு வலயப் பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்து யாழ் பிரதமதபால் நிலையம் நேற்று இயங்கவில்லை.

பாதுகாப்பின்மைகருதி ஊழியர்கள் வேலைக்கு வரவில்லை.

இதன் காரணமாக பிரதம தபால் நிலையத்தில் நேற்று ஒரு கருமமும் நடைபெறவில்லை. தபால்கள் கூட விநியோகிக்கப் படவில்லை

பாதுகாப்பு வலயத்தினுள் வரும் அரச அலுவலகங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், பிரமுகர்கள் யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடன் தொடர்பு கொண்டு, பாதுகாப்பு வலயப் பிரகடனம் பற்றிய அச்சத்தை வெளியிட்டனர்.

ஊழியர்கள் வேலைக்கு வரத்தயக்கம் காட்டுகின்றனர் என்று அரச அதிபரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

பாதுகாப்பு வலயத்தினுள் பண்ணை வீதியும் வருவதால் தீவுப் பகுதி (4 ம் பக்கம் பார்க்க)

## ★முகமூடி தலையாட்ட வீடியோ கடை முற்றுகை

மட்டக்களப்பு, ஜன.18

ஆயுதப்படையினரின் வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 'முகமூடி' நபர் தலையாட்டியதைத் தொடர்ந்து, மட்டக்களப்பு அந்தோனியார் வீதியில் உள்ள வீடியோ கடையைப் படையினர் முற்றுகையிட்டனர்.

கடை சோதனை இடப்பட்டது கடையில் இருந்தவர்களை விசாரணைக்காகப் படையினர் அழைத்துச் சென்றனர்.

நேற்று மாலை இச் சம்பவம் நடந்தது.

ஆஸ்பத்திரிக்கு அருகில் வைத்து குடிபோதையில் வந்த வங்கி ஊழியர் ஒருவரும் இன்னொரு நபரும் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

## 3 ஆயுதப்படையினர் கண்ணிவெடிக்குப் பலி

கொழும்பு, ஜன. 18

மூதூர்த் தொகுதியில் தெஹிவத்த என்னும் இடத்தில் 3 ஆயுதப்படையினர் கண்ணிவெடிக்குப் பலியானுர்கள். மூன்று வீரர்கள் காயம் அடைந்தனர்.

பன்குளத்துக்கு அருகில் நாமல்வத்தை என்ற இடத்தில் நடந்த சம்பவம் ஒன்றில் 3 பொலீஸார் காயமடைந்தனர். போராளிகள் கிறனேட் வீசியதில் இவர்கள் காயமடைந்தனர்.

## பிள்ளையை என்னிடம் கொடுத்துவிட்டு வருமாறு கூறிய இராணுவத்தினர் கணவனை ஒழுங்கையில் விட்டுச் சுட்டனர் !
### மனைவி கதறிக் கதறிக் கூறிய சோகக் கதை !

பலாலி ஜன .18

இராணுவத்தினர் அழைத்த போது எனது கணவர் பிள்ளையுடன் சென்றுர். பிள்ளையை என்னிடம் கொடுத்து விட்டு வரும்படி இராணுவத்தினர் கூறினர். நான் பிள்ளையைக் கணவரிடம் இருந்து வாங்கினேன். எமது வீட்டு படலைக்குள் உள்ள பாதையில் கணவரை நிறுத்தி மூன்று முறை இராணுவத்தினர் சுட்டனர்.

துரைராசா சிவகுமார் என்பவரின் மனைவி அழுது புலம்பியவண்ணம் மேற்கண்டவாறு கூறினர்.

நேற்று குரும்பசிட்டியில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் துரைராசா சிவகுமாரும் (26வயது) ஒருவர்.

இவரது 20 வயது மனைவி தமது கணவருக்கு நடந்த பயங்கரத்தைப் பின்வருமாறு விவரித்தார்:-

ஏழாலையை நோக்கிச் சென்ற இராணுவத்தினர் வந்த போது எமது வீட்டினுள் வந்தே சென்றனர்.

இராணுவத்தினர் வருகின்றுர்கள் என்ற செய்தி கேட்டதும் எனது கணவர் அப்போது ஒளித்திருந்தார்.

வேலியைப் பிடுங்கிக் கொண்டு வந்த அவர்கள் மிகவும் அமைதியாக எம்மைப் பார்த்துக் கொண்டே சென்றனர்.

இதனல் அவர்கள் திரும்பி வரும் போதும் எம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று நினைத்தோம். பிள்ளையையும் தூக்கி வைத்துக் கொண்டு எனது அண்ணனுடன் எனது கணவரும் வீட்டினுள் இருந்தார்.

அப்போது வீட்டின் பின் பக்கத்தால் வந்த இராணுவத்தினர் எனது கணவரை அழைத்தனர்.

பிள்ளையுடன் சென்றவரை, பிள்ளையை என்னிடம் கொடுத்து விட்டு (4ம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

18 - 01 - 86

சனிக்கிழமை

சுபநேரம்
3.35 முதல் 5.05 வரை

ராகுகாலம்
9. 35 முதல் 11.05வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

முன் இரவு 7 35 வரை அட்டமி

# அப்பாவி தமிழ் மக்கள் இனப் படுகொலைக்கு உள்ளாவதை தடுங்கள்

## ராஜீவுக்கு கூட்டணி தந்தி

சென்னை, ஜன. 17

ஒன்றும் அறியாத அப்பாவித் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு ஆளாவதைத் தடுக்கத்தக்க நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு விண்ணப்பித்துள்ளது.

நேற்று அனுப்பிய தந்தி ஒன்றிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி இப்படிக் கோரியுள்ளது.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள 1 கிலோ மீட்டர் பிரதேசங்களைப் பாதுகாப்பு வலயமாக இலங்கை அரசு பிரகடனம் செய்துள்ளதைத் தொடர்ந்தே இத் தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

தந்தியில் கூறப்பட்டு இருப்பதாவது;

பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கை, ஆயுதபடையினர் கனரக ஆயுதங்களை உபயோகிக்க அனுமதி அளிப்பதாக உள்ளது.

(4 ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மூன்றுவது நாளாக கிறனேட் வீச்சு

மட்டக்களப்பு, ஜன. 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாகக் கிறனேட் வீச்சுக்கள் இடம் பெற்றன.

### புதன்

மட்டக்களப்பு பொலீஸ் நிலைய வளவில் காவலில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் மீது கிறனேட் வீசப்பட்டது. மாலை 6 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

படையினர் திருப்பிச் சுட்டதில் முஸ்லிம் சிறுமி றலிமா (7 வயது) ராஜா (வயது 30) ஆகியோர் காயமடைந்தனர்.

### வியாழன்

காலை 10 மணி அளவில் திருமலை வீதி வழியாக ஆயுதப்படையினர் கால் நடையாக வந்தனர்.

இ.போ.ச.டிப்போவுக்கு அண்மையில் வந்தவுடன் படையினர் மீது குண்டுகள் வீசப்பட்டன.

திருப்பிப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் ஒரு கடை, ஒரு வீடு சேதமடைந்தன. வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

### வெள்ளி

காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு கல்முனை வீதியில் நாவற்குடாவில் வைத்து ஜீப்பில் வந்த படையினருக்கு கிறனேட் வீசப்பட்டது. படையினர் திருப்பிச்சுட்டனர். இருதரப்பிலும் சேதம் ஏற்படவில்லை.

## முஸ்லிம் ஒருவரும் காயம் அடைந்தார்

பலாலி, ஜன, 18

வயாவிளானில் 'மணியம் பார்' என்ற மது பானம் விற்கும் கடையில் வேலை செய்யும் ஜனுப் நிசார் (25வயது) என்பவர் நேற்றைய சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானுர்.

படு காயம் அடைந்த இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

## இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிக்கான தேசிய தராதரப் பத்திரப் பரீட்சை, சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரப் பரீட்சை ஆகியவை இம் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மேஜரின் மகன் ராஜா சினிமாவில்

தினசரி சினிமா

புகழ்பெற்ற நட்சத்திரங்களின் வாரிசுகள் வரிசையில் இப்பொழுது மேஜர் சுந்தரராஜனின் மகன் ராஜாவும் சினிமாவில் நுழைகிறார்.

கலைஞானத்தின் "ஜோதிமலர்" படத்தில் இவர் அறிமுகமாகிறார்.

இவருக்கு வயது பதினெட்டு. டில்லியில் பி. காம் ஹானர்ஸ் படித்துக் கொண்டிருக்கிறார். டிஸ்கோ டான்ஸர். இவரின் உண்மையான பெயர் வேதாந்த சீனிவாச ராஜகோபால பத்மநாபன். செல்லப் பெயர் பத்து!

மகனின் சினிமாப் பிரவேசம் பற்றி சுந்தரராஜன் கூறுகையில்;

"எங்க வீட்டு கல்யாணத்துல நண்பர்களோட சேர்ந்து ராஜா டான்ஸ் ஆடிக்கிட்டு இருந்தப்ப ஜெய் (ஜெய்சங்கர்) பார்த்துட்டுப் போனாரு. உடனே கலைஞானத்துக்கிட்ட சிபாரிசு செய்து நடிக்க வைச்சிட்டாரு" என்றார்.

### சிலுக்கின் பதில்கள்

சில்க் ஸ்மிதாவின் கேள்வி - பதிலின் நேற்றைய தொடர்ச்சி இதோ:

கேள்வி: சிங்காரி சிலுக்கே! சிங்காரகமல ஹாசனைப் பற்றிப் பத்து வரிகள் கூறவும்?

பதில்: ஒரே வரியில் கூறி விடுகிறேன். அவர் ஒரு சகலகலாவல்லவர் (எல்லாவிஷயத்திலும்)

கேள்வி: கண்ணே சிலுக்கு! காதல்காட்சியில் நடிக்கும் போது காதல் பொங்கி வழிந்தால் என்ன செய்வாய்?

பதில்: கட்டி அணைத்துக் கொள்வேன் பக்கத்தில் இருப்பவரை.

கேள்வி: உங்கள் திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். எப்போது நடக்கும்?

பதில்: என்னை ஏமாற்றாத மாப்பிள்ளை கிடைத்தவுடன்.

கேள்வி: டைரக்டர் பாரதிராஜாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவரிடம் இளமை இருக்கிறது. இயக்கும் திறமையும் இருக்கிறது.

கேள்வி: சிலுக்கு! உன் மேல் எனக்கு ஒரு கிக்கு! காதல் கலையில போடுவோமா ஒரு முக்கு?

பதில்: என்னிடம் வாரும் தருகிறேன் ஒரு குத்து!

## நெருக்கடிக்கு காரணம் தென் ஆபிரிக்கா

### ருட்டு குற்றச்சாட்டு

ஜோஹன்னஸ்பர்க் ஜன 17

பொருளாதார நெருக்கடியில் ஏழு ஆபிரிக்க நாடுகள் சிக்கியிருப்பதற்கு தென் ஆபிரிக்காவே காரணம் என்று ருட்டு என்ற ஆபிரிக்க நாடு குற்றஞ் சாட்டியுள்ளது.

தென் ஆபிரிக்கா அண்டை கறுப்பு இன நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

கறுப்பு இன கெரில்லாக்கள், இந்த நாடுகளில் இருந்தே தென் ஆபிரிக்கா மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

இக்காரணத்தைக் காட்டியே தென் ஆபிரிக்கா, கறுப்பு இன நாடுகள் மீது பொருளாதாரத் தடையை விதித்தது.

2000 ஆண்டுக்குள்

# அணு ஆயுதங்களை ஒழிக்கவேண்டும்

## ஜெனீவாவில் ரஷ்யா யோசனை

ஜெனீவா ஜன. 17

இரண்டாயிரம் ஆண்டுக்குள் எல்லா அணு ஆயுதங்களையும் ஒழித்துவிடவேண்டும்.

மேற்கண்ட யோசனையை சோவியத் ரஷ்யா ஜெனீவாவில் ஆரம்பித்துள்ள அணு ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுவார்த்தையின்போது தெரிவித்துள்ளது.

ஜெனீவா அணு ஆயுதப் பேச்சுக்களில் அமெரிக்க சிறப்புத் தூதுவர் மாக்ஸ் காம்பெல மன்னும் ரஷ்யாவிலிருந்து விக்ரர் கர்ப்போவ்வும் கலந்து கொண்டுள்ளனர்.

அணு ஆயுத பரிசோதனைகளை மேலும் 3 மாதத்துக்குத் தாம் தனித்துத் தள்ளிப்போடும் திட்டத்தையும் அணு ஆயுத ஒழிப்புத் திட்டத்தையும் ரஷ்ய தலைவர் கொர்பச்சேவ் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்த யோசனைகளை அமெரிக்கா கைதட்டி வரவேற்றுள்ளது. எனினும் இதைத் தானும் ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்க மறுப்புத் தெரிவித்துவிட்டது.

கொர்பச்சேவ்வின் இந்த யோசனைக்கு றேகன் நன்றி தெரிவித்துள்ளார்.

விண்வெளியில் அமெரிக்காவின் நட்சத்திரப் போர்த்திட்டம் கைவிடப்பட வேண்டுமென்ற ரஷ்யாவின் கருத்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

எனினும் றேகன் நிர்வாகம் இத் திட்டத்தைக் கைவிடப் போவதில்லை என வெள்ளை மாளிகைப் பேச்சாளர் லாறி ஸ்பீக்ஸ்ஸும் அமெரிக்கப்பாதுகாப்பு மந்திரி வெயின் பேகரும் அடித்துக் கூறியுள்ளனர்.

சோவியத் ரஷ்யாவின் புதிய யோசனைகள் துணிச்சலான கருத்துகள் என்று ஐ.நா செயலாளர் நாயகம் பெரஸ் டீ குவெய்லர் பாராட்டியுள்ளார்.

சோவியத்தின் இந்த யோசனைகளை முழுமையான கவனத்துடன் தான் ஆராயப் போவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

## புலி முத்திரை சீனாவில் வெளியிடப்பட்டது

### வாங்குவதற்கு மக்கள் பெரும் முண்டியடிப்பு

பீகிங் ஜன. 17

புலி முத்திரை சீனாவில் வெளியிடப்பட்டது.

1986, புலி ஆண்டு ஆகவே புலி முத்திரை வெளியிடப்பட்டது.

பீகிங்கில் உள்ள 350 தபால் நிலையங்களிலும் சனக்கூட்டம் புலி முத்திரையை வாங்க முண்டியடித்தது.

பாரம்பரிய சீன பஞ்சாங்கத்தை நினைவுபடுத்தும் முகமாக சீன அரசு ஒவ்வொரு ஆண்டும் மிருகம் ஒன்றின் படத்தைக் கொண்ட முத்திரை ஒன்றை வெளியிட்டு வருகின்றது.

கடந்த 8 ஆண்டுகளாக இப்படி முத்திரை வெளியிடப்படுகின்றது. புலி முத்திரைக்குச் சரியான கிராக்கி. இதன் காரணமாக ஒருவருக்கு 10 முத்திரைகள் மட்டுமே விற்கப்பட்டன.

முத்திரை சேகரிப்பது சீனாவில் பிரபலமான பொழுதுபோக்கு சுமார் 50 லட்சம் முத்திரை சேகரிப்பாளர் சீனாவில் உள்ளனர்.

### ஏவுகணை வைத்தியம்

ஷாங்காய், ஜன. 17

ஈரல் புற்று நோய்க்கு எதிரான புதிய சிகிச்சை முறை ஒன்றை சீனா கண்டுபிடித்துள்ளது.

வைத்திய 'ஏவுகணை' ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சிறிய 'ஏவுகணை' மூலம் ஈரலுக்குள் மருந்தைச் செலுத்திச் சிகிச்சை அளிப்பதே இந்தப் புதிய சிகிச்சை முறை.

அமெரிக்காவுக்கு எதிராக

## பொருளாதாரப் போர் தொடுக்க வருக

### கடாபி மக்களுக்கு அழைப்பு

திரிப்போலி, ஜன. 17

பொருளாதார வர்த்தகத் தடைகளை விதித்துள்ள அமெரிக்காவுக்கெதிராக லிபிய மக்கள் பொருளாதாரப் போர் ஒன்றைத் தொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி கேர்ணல் கடாபி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரண்டிருந்த மக்கள் கூட்டமொன்றின் மத்தியில் அவர் மேலும் பேசுகையில்;

லிபிய மக்கள் பொருளாதாரப் போர் ஒன்றுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். எந்த ஆயுதத்தால் எதிரி எம்மை அடிக்கிறானோ அதே ஆயுதத்தால் நாம் எதிரியைத் திருப்பி அடிக்க வேண்டும் என்றார்.

லிபியாவின் பொருளாதாரம் அமெரிக்காவில் முடக்கப்பட்டது பற்றி கடாபி கருத்து கூறுகையில்;

லிபியா இந்த வகையிலேயே தன்னுடன் போராட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்றார்.

இந்த எதிர்ப்போரில் எல்லா அரபு நாடுகளையும் தன்னுடன் சேர்ந்து கொள்ளும்படியும் கடாபி கேட்டுக் கொண்டுள்ளார்.

## வெளி உலகில்

யுனெஸ்கோவிலிருந்து

## அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர் விலகுவது குறுகிய தேசியவாதம்

### புதுடில்லி சர்வதேச மாநாடு கண்டனம்

புதுடில்லி ஜன. 17

அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் யுனெஸ்கோ நிறுவனத்தில் இருந்து வெளியேறத் தீர்மானித்திருப்பது குறுகிய தேசியவாதம் அன்றி வேறல்ல.

"யுனெஸ்கோ நிறுவனத்தின் கடந்த காலமும் எதிர்காலமும்" என்னும் பொருள்பற்றி புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் இக்கண்டனம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய சர்வதேச நிறுவனத்தின் ஆதரவில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மூன்றும் திகதி வரை நடைபெற்ற மாநாட்டின் இறுதியில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இம்மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டின் விரிவான அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது:-

இம்முடிவு கவலை தருவதாக அமைந்துள்ளது. பன்மொழி பேசும் பல்லின மக்களைக் கொண்ட அனைத்துலக சபையில் கொள்கை வேறுபாடுகளுக்கு மத்தியிலும் ஜனநாயக ரீதியில் ஒத்துழைக்கும் மனோபாவத்தை இந்த நாடுகள் பிரதிபலிக்கத் தவறிவிட்டன.

1985 ஆம் ஆண்டு ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் நடைபெற்ற யுனெஸ்கோவின் 25-வது மாநாட்டில் சர்வதேச ரீதியில் பயனளிக்கும் திட்டங்களையும் சீர்திருத்தங்களையும் அமுலாக்க திடசங்கற்பம் செய்த காலகட்டத்தில் இந்த நாடுகள் இத்தகைய முடிவு எடுத்தமை வேதனை தருவது ஆகும்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

4,69,000 தமிழருக்கு குடியுரிமை

# தவறான முடிவு என்கிறார் அஸ்கிரிய பீடாதிபதி

## ஜனாதிபதி பலனை அனுபவிப்பாராம்

கொழும்பு. ஜன. 18

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் முடிவை ஜனாதிபதி எடுத்துவிட்டார் இனி அதன் பலனையும் அவரே அனுபவிப்பார்.

இப்படி கண்டி அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்ததேரோ கூறினார்.

4 69 000 மலையகத் தமிழருக்கு குடியுரிமை வழங்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது குறித்து அபிப்பிராயம் வெளியிடுகையிலேயே அஸ்கிரிய பீடாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

மலையகத் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க எடுக்கப்பட்டுள்ள முடிவு ஜனநாயக விரோதமானது.

மலையகத் தமிழரின் பிரச்சினைபற்றி 1977 தேர்தலில் வெளியிடப்பட்ட ஐ.தே. விஞ்ஞாபனத்தில் எதுவும் கூறப்படவில்லை.

ஆகவே மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்குவது குறித்து ஐ.தே.க. 1977 தேர்தலில் மக்கள் அனுமதியை பெற்றதாகக் கூற முடியாது.

இதுவிஷயத்தில் சிங்கள மக்களின் கருத்துக்களைக் கேட்க ஜனாதிபதி தவறிவிட்டார்.

அரசின் முடிவை பௌத்த மகாசங்கம், பௌத்த சிங்களவர்கள் முழுமூச்சாக எதிர்ப்பார்கள்.

இப்படி அஸ்கிரிய பீடாதிபதி சொன்னார்.

## ஈழத் தமிழர் இன்னல்:

### கர்நாடக முதல்வருக்கும் விரிவாக விளக்கப்பட்டது

சென்னை, ஜன. 17

ஈழத் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டேக்கு எடுத்துரைக்கப்பட்டது.

திரு. ஹெக்டேயை கடந்த புதன்று பெங்களூரில் சந்தித்த தமிழ் ஈழ விடுதலை முன்னணி தலைவர் திரு ஈழவேந்தன் அவருடன் இதுபற்றி விரிவாகப் பேசினார்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் அவர் திரு. ஹெக்டேயுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண இது வரை எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து விரிவான விளக்கங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை திரு. ராமகிருஷ்ண ஹெக்டேயிடம் அவர் கையளித்தார்.

தமிழ்நாட்டில் 125 முகாம்களில் சுமார் ஒரு லட்சத்து 35 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தஞ்சமடைந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இப்பிரச்சினை தீவிரமடைந்திருக்கிறது என்றும் திரு. ஈழவேந்தன் தெரிவித்தார்.

மினி சினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
248/5, K.K.S. Road,
JAFFNA,

Un Common Valuar (A)

ரொக்கட் லோஞ்சர்: கிரனைட் லோஞ்சர் போன்ற நவீன ஆயுதத் தாக்குதல் நிறைந்த படம்.

### மட்டுநகரில் திடீர் துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு, ஜன 18

மட்டக்களப்பு நகரில் புதன் மாலை சுமார் 5 – 55 மணியளவில் திடீரென துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

ஆயுதப்படையினர் ரோந்து வந்து கொண்டிருந்த போது போராளிகள் கிறெனேட் வீசினார்கள். அதனைத் தொடர்ந்தே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக அறியப்படுகிறது. மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பகுதிகளைப் படையினர் சுற்றி வளைத்ததாகவும் அறிய வந்தது.

### பனை விழுந்து சிறுமி மரணம்

நல்லூர், ஜன. 18

அரியாலையில் பனை விழுந்து 2 வயது சிறுமி ஒருவர் மரணமானார்.

இறந்தவரின் பெயர் செல்லத்துரை ஷர்மிளா.

## குடியுரிமை வழங்கு முன் சர்வஜன வாக்கெடுப்புத் தேவை

### தினேஷ் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 18

மலையகத் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படுவதற்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் கருத்தை அறியவேண்டும்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரும் மஹரகம எம்.பி யுமான திரு. தினேஷ் குணவர்த்தன, மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

4,69,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படவுள்ளது. நாட்டை விற்கும் இந்த முடிவை ஐக்கிய தேசியக் கட்சி அரசு எடுத்துள்ளது.

அரசாங்கம் கூறும் எண்ணிக்கையிலும் பார்க்க நான்கு மடங்கு அதிகமான மலையகத் தமிழர் இலங்கைக் குடியுரிமை பெறப்போகின்றார்கள்.

ஆகவே அரசாங்கம் குடியுரிமை வழங்கும் திட்டத்தை அமுல் நடத்தும் முன்னர், மக்களின் கருத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் — இப்படி திரு. தினேஷ் குணவர்த்தன தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸும் மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கும் அரசின் முடிவை வரவேற்றுள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் இது சம்பந்தமாக அபிப்பிராயம் வெளியிடுகையில்,

முதலில் சட்ட மூலம் வரட்டும். அதற்குப்பின்னர் தான் எமது கருத்தை வெளியிடுவோம் — என்று சொன்னார்.

கடத்தப்பட்ட சீனி மூடைகள் 1250

## திருப்பி ஒப்படைக்க அரச அதிபர் வேண்டுகோள்

### ஏழைகளே பாதிக்கப்படுவர் என்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 17

கடந்த புதன்கிழமை மல்லாகம் ரயில்வே நிலையத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட 9லட்சம் ரூபா பெறுமதியான 1250 மூடை சீனியை திருப்பிச் செலுத்தும்படி யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அறிக்கையில் அரச அதிபர் கூறியிருப்பதாவது:

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட இச்சீனி 15-1-86 மல்லாகம் ரயில்வே நிலையத்தில் வைத்து இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டது.

பல நெருக்கடிக்குமத்தியில் உணவு ஆணையாளர் கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் யாழ் மாவட்ட மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இச்சீனி கொண்டு வரப்பட்டது.

சீனித் தட்டுப்பாடு ஏழை மக்களைத்தான் பாதிக்கும்.

அவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கொண்டுவரப்பட்ட சீனி மூடைகள் கடத்திச் செல்லப்பட்டது கவலை தரும் சம்பவமாகும்.

இக்கடத்தலினால் உணவுத் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஆகியவற்றிடம் இருந்து உணவுப் பொருள்களை யாழ் மாவட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு பெரும் இடர்ப்பாடுகள் ஏற்படும்.

1985 இல் குருநகர் உணவுக் களஞ்சியத்தில் இடம்பெற்ற கடத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்துக்கு உணவுப் பொருள்கள் வருவது கணிசமான அளவு குறைந்தது.

15-1-86 இல் நடந்த சீனிக் கடத்தல் சம்பவம் யாழ் மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அஞ்சுகின்றேன்.

கடத்தப்பட்ட சீனியைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி இத்தகைய செயலில் ஈடுபட்டவர்களை அன்பாக வேண்டுகின்றேன்.

இவ்வாறு அரச அதிபர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மக்கள் முகம்

### முரசுமோட்டையில் பிரஜைகள் குழு

யாழ்ப்பாணம், ஜன 18

கிளிநொச்சி மாவட்டத்தில் முரசுமோட்டைப் பகுதிக்கென பிரஜைகள் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக திரு. ஐ. நடராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இணைத் தலைவர்களாக திருவாளர்கள் நா. பரராசசிங்கம், மு. கந்தசாமி ஆகியோரும் செயலாளராக திரு கி. அந்தோனிப்பிள்ளை, உதவிச் செயலாளராக திரு. க. நடராஜா, பொருளாளராக திரு. ப. ஸ்ரீ ஆனந்தராஜா ஆகியோரும் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# அபிவிருத்திச் சபை தேர்தல் ஜூனில்

## ஐ. தே. க. தயாராகிறது

கொழும்பு, ஜன. 18

இவ்வருடம் ஜூன் மாதத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களை நடத்தத் தயாராகும்படி, ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களை, ஜனாதிபதி ஜெயவர்த்தன உஷார் படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களுக்கு இது சம்பந்தமாக கட்சிச் செயலகம் பணிப்புரை விடுத்துள்ளது.

இதனிடையில், சிங்களப் பகுதி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களுடன் தமிழ்ப் பகுதி மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவதா என்பது பற்றி ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களின் கூட்டம் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை கோட்டேயில் உள்ள கட்சிச் செயலகத்தில் நடைபெற உள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

நித்திய, அநித்தியப் பொருள்களைப் பற்றி எப்போதும் விசாரணை செய். உன் மனதைக் கவருகின்ற புறப் பொருள்கள் எல்லாம் அழியும் தன்மையுடையன என்பதை அறிய முயல்க, உன் கவனத்தை ஆண்டவனிடம் திருப்புக.

--அன்னை சாரதாதேவி.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073

18-01-86 த. பெ. 23


## பாதுகாப்பு வலயங்கள்; பீரங்கிப் பிரயோகம்; தமிழின அழிப்பின் உச்சமுனை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றிப் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. முகாம்களில் இருந்து ஆயிரம் மீட்டர் (சுமார் 0.62 மைல்) தூரம் வரை உள்ள பகுதிகள் பாதுகாப்புப் பிரதேசங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த சில நாட்களில் யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமைத் தமிழ்ப் போராளிகள் ஏழு தடவைகள் தாக்க முனைந்தனர். அதனைத் தொடர்ந்து தான் அரசாங்கம் பாதுகாப்பு வலயங்களை நிறுவத் தீர்மானித்தது. இலங்கை அரசாங்கத்தின் பிரசாரப் பீரங்கியான ரூபவாஹினியில் இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டது!

பாதுகாப்பு வலயங்கள் உண்டாக்கப்பட்டதால், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடலாம். அதற்காக அரசாங்கம் கவலை கொள்கிறது என்று அரச பீற்றல் ஒலி - வானொலி - தெரிவித்தது.

முகாம்களைப் பாதுகாப்பதற்காக வலயங்கள். அதற்காக மக்கள் அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டும். எப்போது வந்து குண்டு விழுந்து செத்து மடிவோமோ என்ற பயத்துடனும் உயிராபத்துடனும் மக்கள் வாழ வேண்டும். இப்படி ஓர் அரசாங்கம் எதிர்பார்த்தால் அதற்குப் பேர் தான் மக்கள் அரசாங்கமா?

மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகத் தான் மற்றெல்லா நாடுகளிலும் படைகள் இருக்கின்றன. ஆனால் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பு என்ற போர்வையில் மக்கள் செய்யப்படப்போகிறார்கள். இது எதனைக் காட்டுகிறது?

இலங்கையை ஆளும் யு. என். பி. அரசாங்கம் தமிழ் மக்களின் அரசாங்கம் அல்ல. அந்த அரசாங்கத்துக்குத் தமிழ் மக்களின் நலனில், உயிரில் அக்கறையில்லை. அரசாங்கமும், அதன் படைகளும் தமிழ்ப் பகுதிகளில் நடத்துகின்ற தர்பார்கள், எடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் இதனையே மேன்மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் அரசாங்கம் அல்ல என்பது நாளாந்தம் நிரூபிக்கப்பட்டு வருகிறது. எனவே, தானாகவே அது ஒதுங்கிக் கொண்டு தமிழ் மக்கள் தமக்கென ஓர் அரசாங்கத்தைத் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் வழங்கக்கூடாதா?

கோட்டை இராணுவ முகாம் குடாநாட்டின் தலைநகரான யாழ்ப்பாணத்தின் நகர மத்தியில் இருக்கிறது. அரசாங்க அலுவலகங்கள், ஆஸ்பத்திரி, சந்தை, வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பஸ் நிலையம் யாவும் அரசாங்கம் அறிவித்துள்ள பாதுகாப்பு வலயத்திற்குள் வந்து விட்டன.

அவ்வாறாயின் மக்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையை எப்படி நடத்துவது? முக்கியத்துவம் வாய்ந்த முன்சொன்ன கேந்திர ஸ்தாபனங்களை ஒதுக்கிவிட்டு மக்கள் வெளியேற வேண்டுமா? அல்லது இரவோடு இரவாக அவற்றை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறதா?

இது இயலுமான காரியந்தானா? புத்தி கெட்டுப் பேதலித்தவன் நிலையில் அரசாங்கம் நடந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும். காலுக்கு ஏற்றபடி சப்பாத்துத் தைப்பதை விட்டுவிட்டு, சப்பாத்துக்கு ஏற்றபடி காலை வெட்டும் கோணல் புத்தி அரசுக்கு வேண்டாம். யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள இராணுவ முகாமை மூடிவிட்டு வேறு ஏதாவது மாற்று வழியை மேற்கொள்ளட்டும்.

அரசாங்கத்தின் நேற்றைய அறிவிப்பால் மற்றொரு விஷயம் மக்கள் மத்தியில நிரந்தர பதற்றத்தை உண்டு பண்ணி இருக்கிறது.

எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்க பீரங்கி உட்படப் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்த ஆயுதப்படையினருக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பின் அர்த்தம் என்ன? யுத்தம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது என்பதுதான் - இல்லையா?

எதிரி நாட்டுடன் நிகழும் யுத்தத்தில் தான் பீரங்கி போன்ற கனரக ஆயுதங்கள் பாவிக்கப்படுவது உண்டு. மக்கள் நடமாட்டம் இல்லாத தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள படை முகாம்களில் இருந்தே அவை இயக்கப்படுகின்றன. ஆனால் இங்கு....? நகரின் கேந்திர நிலையத்தில் இருந்து பீரங்கிகள் முழங்கப் போகின்றன. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள அப்பாவி மக்கள் எல்லாம் அழித்தொழிக்கப்படப் போகிறார்கள். அதற்கே இப்போது அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது.

சர்வதேச சட்ட நடைமுறைகளின் பிரசாரம் மக்கள் வாழும் பகுதிகளில் வானத் தாக்குதலேனும் நடத்தக் கூடாது. ஆனால் யாழ்ப்பாணத்தில், மக்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ள கோட்டை முகாமிலிருந்து பீரங்கிகளால் தாக்குதல் நடத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உலக வரலாற்றில், உள்நாட்டு ''யுத்தம்'' ஒன்றில் ''கனன்'' எனப்படும் பீரங்கி பாவிக்கப்பட இருப்பது இதுவே முதற் தடவையாகும்.

இது தமிழ் இன அழிப்புத் திட்டத்தின் உச்சமுனை அன்றி வேறல்ல.

# சிறிமா பெற்ற குடியுரிமை தமிழருக்கு நன்மை பயக்குமா?

## புரொன்ட்லைன் ஆசிரிய தலையங்கத்தில் கிளப்பப்பட்டிருக்கும் வினா

குறுகிய நலன்களுக்காக, பழைமைவாதிகளான ஐக்கிய தேசியக் கட்சியினர் 1980 அக்டோபரில் சுதந்திரக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறித்தனர்.

புத்தாண்டில் திருமதி பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டது, அவருக்கு இழைக்கப்பட்ட அரசியல் அநீதியை நீக்கியது.

பதவியில் இருக்கும் போது திருமதி பண்டாரநாயக்கா ஜனநாயகப் பண்புகளை மதித்து நடந்தவராக இல்லாது இருந்து இருக்கலாம்.

அரசியல் துஷ்பிரயோகம் என்ற பெயரில் அரசியல் எதிர்ப்பாளரான அவரை சட்டரீதியான அரசியல் உலகில் இருந்து - நாடாளுமன்றத்தில் உள்ள மிகப் பெரும்பான்மைப் பலத்தைப் பாவித்து - ஏழு ஆண்டுகளுக்கு அகற்றி வைத்தது அரசமைப்புச் சட்டத்தையே வளைத்தது போன்ற செயலாகும்.

அது மட்டுமல்ல, ஜனநாயக விதிகளை ஒழுங்கற்ற முறையில் உபயோகித்ததற்கு ஒப்பாகும்.

அதிகாரங்களுடன் கூடிய ஜனாதிபதி ஆட்சி முறை, ஒரு பொதுத்தேர்தலில் தங்கள் விருப்புக்களை வெளியிடும் வாய்ப்பை மக்களுக்கு வழங்க மறுத்த சர்வசன வாக்கெடுப்பு, மற்றும் அரசியல் தீவிர நடவடிக்கைகள் ஆகியவையே தமிழ் சிறுபான்மையோருக்கு எதிராக அரசு சார்பான இராணுவ நடவடிக்கைகளுக்கு வழி வகுத்தது.

அத்துடன் ஜனநாயகத்துக்கு பலத்த அடியாகவும் அவை அமைந்தன.

ஆகவே நடுநிலையாளர்கள், இடதுசாரிகள், சிறுபான்மையோர் ஆகியோரின் அரசியல் அமைப்புக்கள், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி மீது அரசியல் யோசடிக் குற்றச்சாட்டை சுமத்தியதில் வியப்பு ஏதும் இல்லை.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு இலங்கை ஜனாதிபதி வழங்கிய மன்னிப்பு, இழைக்கப்பட்ட அரசியல் தவறுகளுக்குப் பரிகாரமாக அமைந்துள்ளது.

அதே நேரத்தில் கஷ்டத்தின் மத்தியில் உள்ள தமிழர் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கக் கூடிய நிலையை ஏற்படுத்துவதாகவும் இது அமைந்துள்ளது.

நிபந்தனைகள், கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு நாடாளுமன்ற, அரசியல் வானில் மீண்டும் திருமதி பண்டாரநாயக்கா பிரவேசித்துள்ளது. நாட்டின் இனப் பிரச்சினைக்கு எதைக் கொண்டுவரப் போகின்றது?

'தேசிய முன்னணி' ஒன்றை வகுப்புவாத எண்ணங்களுடன் அமைக்க திருமதி பண்டாரநாயக்கா எடுத்த முயற்சிகளை மறக்க முடியாது.

ஆனால் தமிழர் பிரச்சினை குறித்து அண்மையில் அவர் வெளியிட்ட சில அறிவிப்புக்கள் ஊக்கம் தருவதாக அமைந்துள்ளன.

ஆச்சரியம் தரக்கூடிய விதத்தில் அவருக்கு மீண்டும் குடியுரிமை வழங்கப்பட்டது. அதற்கு முதல் நாள் கொழும்பில் 'இந்து' பத்திரிகைக்கு திருமதி பண்டாரநாயக்கா பேட்டி அளித்தார்.

''அரசியல் தீர்வு அவசியம். முற்று முழுதாக அது தான் அவசியம்'' இப்படி திருமதி பண்டாரநாயக்கா அப்பேட்டியில் சொன்னார்.

> சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் குடியுரிமையை இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன புத்தாண்டுப் ''பரிசாக'' வழங்கினார்.
>
> அது குறித்து 'இலங்கையில் புதிய திருப்பம்' என்ற தலைப்பிட்டு 'புரொன்ட்லைன்' ஆங்கில சஞ்சிகை ஆசிரியத் தலையங்கம் எழுதியுள்ளது.
>
> 'இந்து' நாளிதழ் வெளியிடும் 'புரொன்ட்லைன்' சஞ்சிகையின் ஜன. 11-24 இதழில் இத்தலையங்கம் வெளியாகியது. அத்தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

இராணுவத் தீர்வு பற்றி உத்தியோக மட்டத்தில் நிலவும் சாதகமான கருத்துக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா கருத்து வெளியிட்டார்.

''இராணுவ ரீதியில் சண்டை இட்டுக் கொண்டே போகலாம். சண்டை, சண்டை.... நாம் எல்லாம் அழிந்து போகும் வரை'' இப்படி அவர் சொன்னார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் 'பிரித்தாளும் தந்திரம்' பற்றியும் அதன் மூலம் தமிழர் சிந்தனை 'இறுக்க' மடைவதையும் இந்த இரண்டுக்கும் தெளிவான தொடர்பு ஒன்று இருப்பதையும் திருமதி பண்டாரநாயக்கா கண்டிருக்கிறார்.

பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படுவதற்கு அபாயமான முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவற்றை நீக்க இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்குச் சாதகமாக திருமதி பண்டாரநாயக்கா கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சி ஒன்றின் தலைவியான அவர், பொதுத் தேர்தல் நடத்தவேண்டும் என்ற தனது சட்டரீதியான கோரிக்கைக்கும், ஜனநாயக நடைமுறையில் தமிழர் அமைப்புக்கள் அதில் பங்குபற்றுவதற்கும் ஒரு தொடர்பை உருவாக்கி உள்ளார்.

இதன் தொடர்பு பற்றிய விவரங்கள், தீவின் பிரச்சினைகளை இதன்மூலம் எப்படி சமநிலைப்படுத்தி கையாளுவது என்பன பற்றி இன்னும் தெளிவாகவில்லை.

இந்தத் தருணத்தில், அரசாலும் அரச ஆயுதப் படையினராலும் நிர்க்கதியான தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் கொடூரங்களைக் கண்டிக்க வேண்டியுள்ளது.

வெளிநாட்டுச் சக்திகளான பாகிஸ்தான், இஸ்ரவேல் ஆகிய நாடுகளின் தலையீடும் இக் கொடூரங்களுக்கு உதவுகின்றன.

கடைசியாக இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன ''இராணுவத் தீர்வு தவிர்க்க முடியாதது''— என்று பேசி உள்ளார். இது நிச்சயமாக அரசியல் புத்திசாலித்தனமான பேச்சு அல்ல.

அரசியல் தீர்வு காணப்படுவதற்கு ஆதரவாகப் பேசியதற்காக திருமதி பண்டாரநாயக்காவையும் ஜனாதிபதி ஜெயவர்த்தன கண்டித்துள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் ஓரளவு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வரக்கூடியதான தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகள் பேச்சுவார்த்தை மேசையில் வைக்கப்பட்டுள்ளன.

சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதான தீர்வு ஒன்றைக் காண இந்தியா முயற்சி செய்து கொண்டு இருக்கின்றது.

இப்படியான தருணத்தில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு பேசியிருக்கின்றார்.

இக்கட்டத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீண்டும் அரசியல் வானுக்குள் வந்து இருப்பது சந்தேகம் இல்லாமல் புதிய திருப்பம் தான்.

தமிழர்களைப் பொறுத்த மட்டில் இந்தப் புதிய திருப்பம் எந்தப் பாதையை நோக்கிச் செல்லப் போகின்றது''?—



**பொய்யாமொழி**

குறள்:
மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

பொருள்:
இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லையானால், ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதானாலும் பயன் இல்லை.

## வெங்காயச் செய்கை முற்றாக நாசம்

### வலி- கிழக்குப்பகுதியில் வெள்ள அனர்த்தம்

அச்சுவேலி, ஜன. 18

வலி, கிழக்குப் பகுதியில் வெங்காயச் செய்கை அண்மையில் பெய்த பெரு மழையினால் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் பரந்தளவில் வெங்காயம் செய்கை பண்ணப்படும் இடங்களான அச்சுவேலி, இடைக்காடு, புத்தூர், நீர்வேலி, உரும்பராய் பகுதித் தோட்டங்கள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இந்தப் பகுதிகளில் பச்சைப் பசேலென காட்சியளித்த விளைநிலங்கள் தற்போது அழுகிய வெங்காயப் பயிர்களுடன் துர்நாற்றம் வீசும நிலையில் காணப்படுகின்றன.

அச்சுவேலிப் பகுதி வெங்காயத் தோட்டங்களில் கொக்கு போன்ற கடற்பறவைகள் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ் வெங்காயச் செய்கையில் ஏற்பட்டுள்ள பாரிய பாதிப்பு அடுத்த போக வெங்காயச் செய்கைக்கு விதைவெங்காயம் இல்லாத ஓர் இக்கட்டான சூழ நிலையை தோற்றுவித்திருக்கிறது.

## அபிவிருத்தியில் அறவழிக் குழு

யாழ்ப்பாணம், ஜன. 18

அறவழிப் போராட்டக் குழு கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட உள்ளது.

பூர்வாங்க நடவடிக்கையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய கிராமங்களை இனங்காணும் முயற்சியில் இந்த இயக்கம் ஈடுபட்டுள்ளது.

இதற்கென ஐவரைக் கொண்ட குழு ஒன்று அறவழிப் போராட்ட இயக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் அறிக்கை கிடைத்ததும் கிராமங்கள் தெரிவு செய்யப்படும்.

### சீனிக் கடத்தலை சாட்டாக வைத்து

# சீனி, மா, அரிசி வருகை தடுக்கப்படலாம்

## தேசிய கூட்டுறவுச் சபை தலைவர் எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 18

சீனிக் கடத்தலைச் சாட்டாக வைத்து யாழ் மாவட்டத்துக்கு சீனி, மா, அரிசி வருவது தடுக்கப்படலாம். இதனைக் கருத்தில் கொண்டு கடத்தப்பட்ட சீனியை திருப்பி ஒப்படையுங்கள்.

தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

சீனி கடத்தப்பட்டதனால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை மக்களே. அதுவும் உணவு முத்திரைகளைக் கொடுத்து உணவுப் பொருள்களைப் பெறும் ஏழைகள்தான் பாதிக்கப்படுவார்கள்.

தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் என்ற வகையில் உணவுத் [illegible] வேண்டி அரச அதிபர், [illegible] பாட்டதிகாரி ஆகியோரை வற்புறுத்தியதற்கு இணங்க இச்சீனி கொண்டு வரப்பட்டது. இச்சீனி கடத்தப்பட்டது துரதிர்ஷ்டவசமானது.

உணவுப் பொருள்களைக் கடத்துவதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டமில்லை என்று கருதக்கூடும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி கிடைக்கச் செய்யும் [illegible] கூட்டுறவுச் சங்கங்களுக்கு [illegible] திரு. சிவமகாராசா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் பெருமானுக்கு அழகிய ஓர் உருவச்சிலை

### கீரிமலையிலிருந்து பவனி

திருமுறை தந்த பெருமகனார் திருநாவுக்கரசருக்கு யாழ் நகரில் அழகிய சிலை ஒன்று வடிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிலை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்.

லோக ஷேமத்தின் பொருட்டு அப்பர் பெருமானின் உருவச்சிலையை யாழ்ப்பாணத்தில் பல இடங்களுக்கும் ஊர்வலமாக எடுத்துவர சிவாச்சாரியார்களும், கல்விமான்களும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

யாழ். இந்துக் கல்லூரி இந்துமாமன்றத்தின் உபயம் இத்திருவுருவச் சிலை.

பவனி விழா கடந்த புதன்கிழமை கீரிமலை அருள்மிகு நகுலேஸ்வர ஆலயத்திலிருந்து புறப்பட்டது.

ஊர்வலம் மாவிட்டபுரம் பெரு வீதியூடாகத் தை, மாசி மாதங்களில் வார ரீதியில் நடைபெற்று, நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிறைவுறும்.

அப்பர் பெருமான் முன்பு எவ்வாறு ஆலய தரிசனம் செய்து கொண்டே க்ஷேத்ராடனம் செய்தாரோ அவ்வண்ணமே அவரது திருவுருவச் சிலையையும் எடுத்துவர சைவ அபிமானிகள் முன்வந்திருப்பது போற்றத்தக்க செயலாகும்.

சைவங் குன்றிய காலத்தில் அதனை வளர்க்கப் பாடுபட்டவராகிய அப்பர் பெருமானை நாம் இக்காலகட்டத்தில் நினைவு கூருவது சாலப் பொருந்தும்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலிருந்து புறப்படும் பவனி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில், சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில், இணுவில் மஞ்சத்தடி முருகன் கோயில், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், வண்ணை காமாக்ஷி அம்பாள்கோயில், சாந்தையர் மடம் விநாயகர் கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் ஆகியவற்றில் தங்கிய பின்னர் நல்லை ஆதீனத்தைச் சென்றடையும்.

## சித்த வைத்தியத்துறை உயர்நிலை போதனை தமிழில்

### யாழ்.பல்கலைக்கழகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை மாணவர்களுக்கு உயர் நிலையில், தமிழ் போதனை ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

சித்த வைத்தியத்துறை மாணவர்களின் ஐந்தாண்டு காலப்பாட போதனையில் மூன்றாண்டு காலம் தமிழ் போதனை கட்டாயம் ஆக்கப்பட்டு உள்ளது.

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. வே. ந. சிவராசா உதயனுக்கு இத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்.பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் திரு. ஆ. வேலுப்பிள்ளையின் நெறிப்படுத்தலின் கீழ் கலாநிதி. ஈ. பாலசுந்தரம் இம்மாணவர்களுக்கான தமிழ் விரிவுரைகளை நடத்துகிறார்.

சித்தர் பாடல்களில் உளம், உடல்சார்ந்த பல கருத்துக்கள் பொதிந்து காணப்படுவதால், இம் மாணவர்கள் தமிழறிவு பெறுவது அக்கருத்துக்களை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். எனவே தான் இப்பாட நெறி ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

—இவ்வாறு திரு. சிவராசா விளக்கினார்.

## பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுவின் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சின் பரிசீலனைக்கு ஜனாதிபதியின் செயலகம் அனுப்பி வைத்துள்ளது.

அரச படைகளின் வன்செயல் காரணமாக உயிரிழந்த முப்பத்தேழு தொழிலாளர் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குமாறு வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழு ஜனாதிபதியை முன்னர் கோரியிருந்தது.

பாஸ்போர்ட், பொண்ட், விசா
டிக்கட், பிரயாண காசோலைகள்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
RAJEEVAN
TRAVELS
42, Clock Tower Road, Jaffna.
(Opp. B. M. C) T' Phone: 23665

உதயன்
18 01-1986

இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு
செல்வதற்கான
அவசர கால பாஸ்போர்ட், டிக்கட்,
விசா பிரயாண காசோலைகள்
உடன் செய்து தரப்படும்
ரஜீவன் டிரவல்ஸ்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(B M.C முன்பாக) போன்:- 23665

# உருத்திரபுரத்தில் துப்பாக்கி சூட்டுக்கு மூவர் பலி

## ஒரு சடலம் கருகிய நிலையில் கிடந்தது

### நேற்றும் குண்டு வெடிப்புச் சத்தங்கள்

கிளிநொச்சி, ஜன. 18

நேற்று முன்தினம் நண்பகல் உருத்திரபுரம் பகுதிக்குச் சென்று இராணுவம் சுட்டதில் மூவர் பலியாகினர்.

80 பேர் கைது செய்யப்பட்டனர். இரு உழவு இயந்திரங்களும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சைக்கிள்கள் பலவும் இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இராணுவம் ஹெலிக்கொப்டர் மூலமும், கவச வாகனங்கள், தனியார் லொறிகள் மூலமும் சென்று 8 ஆம் வாய்க்கால் பகுதியில் துப்பாக்இப் பிரயோகம் செய்தது.

அப்போது இளைஞர் கோஷ்டி ஒன்று எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் அதில் சில இராணுவ வீரர்கள் காயமடைந்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இறந்தவர்களது சடலங்களில் இரண்டு அடையாளம் காணப்படுவதற்காக இராணுவத்தால் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மற்றும் ஒருவரது சடலம் கருகிய நிலையில் 8 ஆம் வாய்க்கால் பகுதியில்காணப்பட்டது. இதே வேளை நேற்றும் பலத்த குண்டுச் சத்தங்கள் அந்த இடத்தில் கேட்ட வண்ணம் இருந்தன.

இறந்தவர்களில் ஒருவர் ஜெயந்தி நகரைச் சேர்ந்த இதயரூபன் எனத் தெரியவந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 20 பேர் அதேதினம் விடுதலை செய்யப்பட்டனர்.

## வித்தாரம்

என்ன முரளியாரே! மன்னிக்கவேணும். பொங்கலுக்குப் பிறகு மூண்டு நாளா உம்மைச் சந்திக்க நேரமில்லாமல் போச்சு. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை வீட்டில பிஸியான நாள். அதாலை எப்பிடியும் உன்ரை முகத்தை இண்டைக்குத் தரிசித்து விடுவோம் எண்டுதான் இப்ப ஓடோடி வந்தனான்.

மூண்டு நாளுக்கையும் எத்தினை எத்தினை வெஷயமெல்லாம் நடந்திட்டுது. எதைச் சொல்லுறது, எதை விடுறது எண்டு தெரியயில்லை.

எங்கடை தொண்டமான் மந்திரியாருக்கு ஒரு வெறறி கிடைச்சிருக்கு. பல பக்கத்தாலையும் நெருக்குதலைப் போட்டு, எப்பிடியோ மலையகத் தமிழ்த்தோட்டத் தொழிலாளருக்குக் குடியுரிமை குடுக்கிறோம் எண்டு இலங்கை அரசாங்கத்தைக் கொண்டு சொல்லுவிச்சுப் போட்டார் அவர் மந்திரிசபையிலை சேரயிக்கை நினைச்ச காரியத்தை ஒரு மாதிரி நிறைவேற்றி இருக்கிறார். எட்டரை வருஷத்துக்குப் பிறகுதான் அவராலை அதைசசாதிக்க முடிஞ்சுது.

மலையகத் தமிழர் நாடற்றவர் நிலையிலிருந்து நீங்கிக் குடியுரிமை பெறும் நிலை இந்தா வருகுது அந்தா வருகுது எண்டு நம்பி நம்பி ஏமாந்தவர்தான் திரு. தொண்டமான், 1982 இல் ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு கட்டாயம் குடியுரிமை கிடைக்க ''பெரியவர்'' ஏற்பாடு செய்வார் எண்டு நம்பியிருந்தவர்.

நான் கொழும்பிலை இருக்கையிக்கை, தம்பி பேப்பரிலை போட்டுக் கெடுத்து விடாதையும் இந்தமுறை கட்டாயம் எங்கடை ஆக்களுக்குக் குடியுரிமை கிடைக்கப் போகுது எண்டு சொல்லிக்கொண்டு நம்பிக்கையோடு இருந்தவர்.

இப்ப 86 இலை தான் ஒரு மாதிரி ''பெரியவரை'' இணங்க வைச்சு வெளியாலையும் சொல்ல வைப்பிச்சுப் போட்டார்.

ஆனால் எல்லோருக்கும குடியுரிமை கிடைச்ச பிறகுதான் நான் நம்புவேன். மஞ்சள் அங்கிக்காரர் சும்மா விடமாட்டினம். இப்பவே மலைநாட்டிலும் ஒரு தமிழீழம் வரப்போகுது எண்டு 'கூ'க்காட்டுறவை 4 லட்சம் தமிழருக்குக் குடியுரிமை குடுக்க விடினம் எண்டு நினைக்கிறியளே.

''பெரியவர்'' பண்டா – செல்வா ஒப்பந்தத்தை ஆட்சேபிச்சுக் கண்டி யாத்திரை போனமாதிரி மஞ்சள் அங்கிக்காரரும் கதிர்காம யாத்திரை போவினமோ? ஆருக்குத் தெரியும்..

சிறிமா அம்மையார் இந்த விஷயத்திலை வாய் திறக்கமாட்டார் எண்டு தான் தொண்டமான் நம்புகிறார். ஏனெண்டா அப்பிடிச் செய்யக்கூடாது எண்ட நிபந்தனையோடுதான் இந்தியா அவவுக்குக் குடியுரிமை குடுக்கச் சிபார்சு செய்ததாக ஒரு சேதி என்ரை காதிலை விழுந்தது

வாங்கிறதையும் வாங்கிக்கொண்டு, செய்யிறத்தையும் செய்யிறவை இருக்கினம் தானே பொறுத்திருந்து பார்ப்போமே.

* * *

அது போச்சா? யாழ்ப்பாணத்திலை உள்ள இராணுவமுகாமுக்கு அருகிலை ஆயிரம் மீட்டர் துலைவிலை உள்ள இடம் எல்லாத்தையும் பாதுகாப்பு வலயங்கள் எண்டு அரசாங்கம் அறிவிச்சுப் போட்டுது.

எங்கடை பெடியள் தங்களோடை முட்டினால் பீரங்கியும் பாவிக்கப் போகினமாம்!

பிறகென்ன, உள்நாட்டு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தின மாதிரித்தான். பெடியள் முட்டிச்சினம் எண்டு சும்மா சொல்லிப் போட்டு, அல்லாட்டாத் தாங்களே ஒரு குண்டை முகாமுக்குக்கிட்டப் போட்டிட்டு அதைச் சாட்டிப் பீரங்கியைச் சுழட்டினு ஆர் கேக்கிறது?

போன 5ஆம் திகதி கண்காணிப்புக்குழு கோட்டையுக்குள்ளை இருக்கயிக்கை வெளியாலை சுட்டு தள்ளினவைக்கு, இல்லாத பொல்லாத அதிகாரம் எல்லாம் குடுத்த பிறகு தமிழ்ச் சனத்தை விட்டு வைக்கப் போகினமே.

உனக்குத் தெரியுமே, உள்நாடு ஒண்டிலை நடக்கிற சிவில் யுத்தம் ஒண்டுக்குப் பீரங்கி பாவிக்க அனுமதி குடுத்திருக்கிறது இலங்கையிலைதான் முதல் தடவையாய் நடந்திருக்கு. மற்ற நாடுகள், எதிரி நாட்டோடை பிரகடனப்படுத்தப்பட்ட யுத்தத்தை நடத்தயிக்கை தான் பீரங்கி பாவிக்கிறது.


அப்ப எங்கடை பெடியங்களுக்கு வெளிநாட்டு இராணுவத்துக்கு இருக்கிற பலம் இருக்கெண்டு அச்சாணியார் மதி பிட்டிருக்கிறரோ, பின்னை.

தமிழ்ப் பெடியளுக்கு எங்கடைபலத்தைக் காட்டுவதற்காகத்தான் நாங்கள் இராணுவ நடவடிக்கை எடுக்கிறோம். எங்களுக்கு அரசியல் தீர்விலை தான் நம்பிக்கை- எண்டு எடுத்துச் சொன்னவர் இப்ப படைகளைப் பாதுகாக்க வலயங்கள் போடுறரே!

பாவம், அவருக்கு இந்த மத்திம வயசிலையே வாக்குமாறிப் போச்சோ! பாதுகாப்பைத் தலையிலை தூக்கிப் போட்ட பிறகு அவற்றை மண்டைக்குப் பாதுகாப்பில்லாமல் வெய்யில் சூடு அதிகம் படுகுது போலை.

எனக்குத் தெரியக்கூடியதாக, வர்த்தகக் கப்பல் துறை அமைச்சராக இருக்கயிக்கை அவர் தங்கமான முதலி.

எல்லாம் காலத்தின் கோலம், கலங்காதே முரளி!



## இயக்கங்களின் பெயரில் நடக்கும் கொள்ளைகளை அனுமதிக்க முடியாது

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன.18

விடுதலை அமைப்புக்களின் பெயர்களைப் பயன்படுத்தி உடைமைகளைச் சூறையாடுவதையோ, சேதப்படுத்துவதையோ, எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது.

இத்தகைய நடவடிக்கைகள் விடுதலை அமைப்புக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான பிணைப்பை இல்லாது ஒழிக்கும் என்பதால் நாம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.

இப்படி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

13-1-86இல் இடம் பெற்ற யாழ். கஸ்தூரியார் வீதி, நகைக் கொள்ளை தொடர்பாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கை பின்வருமாறு:

13 – 01 – 86 அன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத் தொழிற்சாலை ஒன்று, ஆயுதங்கள் சகிதம் வந்த கொள்ளையர்களால் சூறையாடப்பட்டுள்ளது கொள்ளையர்கள் எமது ஸ்தாபனத்தின் பெயரை உபயோகித்தே இக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர் எமது ஸ்தாபனத்தின் பெயரை உபயோகிக்கும் இவ்வாறான கயமைத்தனமான செயல்களை நாம் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாதவர்களாகியுள்ளோம்.

ஏற்கனவே எமதுஸ் தாபன பெயரைப்பயன்படுத்தி, சில தனியார் வாகனக் கடத்தல்கள் கொள்ளைகள் போன்றவற்றில் ஈடுபட்டவர்க நாம் அடையாளம் கண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு இனங்காட்டியுள்ளோம்.

இதுகவிர திட்டமிட்ட வகையில் எமது ஸ்தாபனப் பெயரை மக்கள் விரோத நடவடிக்கைகளுடன் இணைத்துப் பேசுவோர் மீதும் நாம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. சயபந்தப்பட்டவர்களை எமது தோழர்கள் அணுகி, உரிய விளக்கம் கொடுத்த பின்னரும் தொடர்ந்து அவர்கள் வதந்திகள் பரப்புவது தொடருமானால் நாம் நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகும்.

எமது தவறுகளை சுட்டிக் காட்டவும் விமர்சிக்கவும் மக்களுக்கு உரிமையுண்டு. நாம் மக்களிடமிருந்து தான் கற்றுக் கொள்கிறோம். எம்மை விமர்சியுங்கள், தவறுகளை சுட்டிக் காட்டுங்கள் என்று நாம் மக்களைக் கேட்கிறோம்.

ஆனால் பொறுப்பற்ற முறையில் தவறான வதந்திகளை நம்பி எமது ஸ்தாபனத்தைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான விடயங்களை கூறித் திரிவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். எமது ஸ்தாபன தோழர்களை அணுகி எவ்விதமான விளக்கமும் கேட்காமல் வாய்க்கு வந்தபடி திரிபுபட்ட செய்திகளைப் பேசித்திரிவது மிகவும் பொறுப்பற்ற செயலாகும். எமது ஸ்தாபனம் பற்றிய விமர்சனங்களை உங்கள் மத்தியிலுள்ள எமது தோழர்கள் மூலம் முன்வையுங்கள். எம்மோடு இணைந்து நின்று எம்மைத் திருத்துங்கள். பலமாகுங்கள் என்று எமது மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

எமது ஸ்தாபன பெயரைப் பயன்படுத்துவோர்மீது நாம் நடவடிக்கை எடுப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## ரயிலில் வந்த சீனி பொதுமக்கள் பாவனைக்கு

### உரியதல்ல என்கிறது 'புளொட்'

சென்னை, ஜன.17

இம்மாதம் 15–ஆம் திகதி ரயிலில் வந்த சீனி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவில்லை என்றும் இராணுவத்தினருக்கு வந்தது என்பது தெரிந்த பின்பே கைப்பற்றப்பட்டது என்றும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) இங்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கிறது.

தாமே சீனியைக் கைப்பற்றி இருப்பதாக அறிவித்த பிரஸ்தாப கழகம் அது இராணுவத்துக்கு வந்தது எனபதை நிரூபிக்க முடியும் எனத் தெரிவித்திருக்கிறது.

அரசாங்க அதிபரினால் 17 1 86இல் தெரிவிக்கப்பட்ட அச்சம், மக்களைக் காட்டி அரசாங்கம் தன் நஷ்டத்தை ஈடுசெய்ய முயன்றிருக்கலாம் என்னும் சந்தேகத்தையே எமக்கு ஏற்படுத்தி உள்ளது.

அத்துடன் திரு. சிவமகாராசாவின் அறிக்கை இந்நிலையிலும் தான் தேசிய கூட்டுறவுச் சபையின் அங்கத்துவத்தைக் காப்பாற்ற மக்களைப் பாவிக்கின்றார் என்ற அச்சத்தையும்ஏற்படுத்தி உள்ளது. இதன் பின்னணியில் இயக்க முரண்பாடுகளைப் பாவிப்பதற்கான சில முயற்சிகளும் மக்களைக்காரணம்காட்டி மேற்கொள்ளப் படுவதாக அறிகின்றோம்.

அண்மைக் காலமாக யாழ் மாவட்டத்திற்கான உணவு விநியோகம் கப்பலூடாகவே நடைபெறுகின்றது என்பது பொதுமக்களுக்குத் தெரிந்த விடயம். அன்றைய தினமே கப்பல் ஒன்று காங்கேசன் துறைத் துறைமுகத்தில் நங்கூரம் இட்டு உள்ளது. என்பதையும் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அப்பாவி.....

(1ம் பக்க தொடர்ச்சி)

இது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் சிவிலியன் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

இந்த இரண்டு மாகாணங்களிலும் மக்கள் வாழும் பகுதிகளில் 60 இராணுவ முகாம்கள் உள்ளன.

பாதுகாப்பு வலய நடவடிக்கையால் சிவிலியன்கள் கொல்லப்படலாம்: வீடுகள் நாசமாக்கப்படலாம் என்று இலங்கை இராணுவக் கமாண்டோக்கள் எச்சரிக்கை விட்டுள்ளனர்.

அப்பாவித் தமிழ் மக்களுக்கு அழிவும் மரணமும் நேர இருப்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

இப்படிப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய தந்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சுட்டிக்காட்டியுள்ளது.

## ஆலங்கேணி தாக்குதல்பற்றி ஈழமக்கள் செய்தி தொடர்பு நிலையம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

ஜனவரி 15–ஆம் திகதி அதிகாலையில் மூதூர் தொகுதியிலுள்ள ஆலங்கேணியில் ஸ்ரீ லங்கா கடற்படை அதிகாரியான லெப்டினன்ட் கமாண்டர் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக இலங்கை அரசு வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது.

ஈழமக்கள் செய்தித் தொடர்புநிலையம் நேற்று மாலை சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஈழமக்கள் செய்தித் தொடர்புநிலையம் வெளியிட்டுள்ள விவரம் வருமாறு;

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் முகாம் ஒன்று ஆலங்கேணியில் இருந்தது.

இம்முகாமை கடற்படையினர் முற்றுகையிட்ட போது மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த்துத் தாக்கினர்.

இத்தாக்குதலில் கடற்படை அதிகாரியான ஜே. எச். பஹார் கொல்லப்பட்டதுடன், கடற்படையினர் பலர் காயமடைந்தனர்.

மக்கள் விடுதலைப்படையின் முகாமில் இருந்த குழந்தையையும், தாயையும் கடற்படை அதிகாரி காப்பாற்ற முற்பட்ட போதே அவர் கொல்லப்பட்டார் என்று அரசு கூறுவது உண்மைக்குப் புறம்பானது ஆகும்.

## பிள்ளையை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும்படி அவர்கள் கூறினர்.

நான் பிள்ளையை வாங்கினேன். எனது வீட்டுப் படலைக்குள் உள்ள பாதையில் எனது கணவரை நிறுத்தி மூன்று முறை சுட்டனர். நான் கதறினேன். எனது கணவனைச் சுட்ட சிப்பாய் எனது அண்ணனையும் அழைத்தான். அண்ணன் சென்றார். அப்போது இராணுவ அதிகாரி ஒருவர் சுட வேண்டாம் என்று சிங்களத்தில் கூறியது போல இருந்தது. அவன் அண்ணனை விட்டு விட்டுச் சென்றான். பின்னால் வந்த கவச வாகனத்தை விழுந்து கிடந்த எனது கணவனுக்கு மேல் ஏற்ற முனைந்தனர். நான் கதறினேன். பின் வாகனத்தை ஓரத்தால் செலுத்திச் சென்றனர்.

இவ்வாறு அவர் கூறினர்.

## அரச அலுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் போக்குவரத்துச் செய்ய அஞ்சுவதாகவும் அரச அதிபரிடம் நேற்று முறையிடப்பட்டது.

அச்சத்துடன்தான் வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்கள் நேற்று வேலைக்குச் சென்றனர்.

ஊழியர்களின் அச்சம் குறித்து மகஜர் ரூபத்தில் மேலிடத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மினி பஸ்கள் ஒதுக்குப்புறமான இடங்களில் நிற்பாட்டப்பட்டே பயணிகளை நேற்று ஏற்றிச் சென்றன. அரச பஸ்கள் தான் பஸ் நிலையத்தில் காணப்பட்டன.

பெரிய கடைப்பகுதியில் சில கடைகள் திறக்கப்பட்டன. பல கடைகள் மூடப்பட்டு இருந்தன.

நகரில் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

கோட்டை இராணுவ முகாம் முன்னால் உள்ள தொலை தொடர்புத் திணைக்கள அலுவலக ஊழியர்கள் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

கோட்டை முகாமுக்கு முன்னால் உள்ள எல்லா அலுவலகங்களையும் இடமாற்றினாலும் தொலை தொடர்புத் திணைக்கள அலுவலகத்தை எங்கும் இடமாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

காரணம், இந்த அலுவலகத்தில் பொருத்தப்பட்ட இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை உடனே அகற்றுவது முடியாத காரியமாகும்.

ஆகவே என்ன நிலைமை வந்தாலும் இந்தத் திணைக்கள ஊழியர்கள் அங்கு தான் கடமையாற்ற வேண்டியுள்ளது.

## குரும்பசிட்டி, ஏழாலை.....

(1-ம பக்கத் தொடர்ச்சி)

இராணுவ வீரர்கள் காணப்பட்டனர்.

அவர்கள் வயாவிளான்–தெல்லிப்பழை வீதியில் உள்ள மடத்தடிச் சந்தி வழியாக குரும்பசிட்டியை நோக்கி வந்தனர்.

பின்பு அங்கிருந்து ஏழாலை நோக்கிப் புறப்பட்டனர்.

கவச வாகனங்கள் வருவதற்காக இராணுவத்தினர் பல இடங்களில் வேலிகளை வெட்டினர் இராணுவம் வருவதை அறிநத மக்கள் அங்கும் இங்கும் கிலி கொண்டு ஓடினர்.

குரும்பசிட்டியை இராணுவத்தினர் அண்மித்ததும் கிரனைட் வீசப்பட்டது.

எனினும் இராணுவத்தினர் முன் தொடர்ந்தனர். சரமாரியாக சுட்டுக்கொண்டே இராணுவத்தினர் வந்தனர். குப்பிளான் வீதியூடாக ஏழாலை பத்திக்கு அவர்கள் வந்தனர்.

ஏழாலை மத்திக்கு இராணுவத்தினர் வந்ததும் போராளிகள் எதிர் கொண்டு தாக்கத் தொடங்கினர். கிரனைட் போன்றவற்றால் ஆரம்பத்தில் தாக்குதல் தொடங்கப்பட்டது.

பின்பு துப்பாக்கியால் தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்பொழுது வானத்திலிருந்து ஹெலிக்கொப்டர் ஒன்று சரமாரியாகச் சுடத் தொடங்கியது. மின்வயர்கள் அறுந்து விழுந்தன.

இராணுவத்தினர் வந்த வழியாக திரும்பிய போது ஏழாலையில் உள்ள ஒரு வீட்டை முற்றாக எரித்தனர் இன்னுமோர் வீட்டுக்கும் நெருப்பு வைக்கப்பட்டது.

நான்கு வீடுகளில் இருந்த மோட்டார் சையிக்கிள்கள், சுவர் மணிக்கூடு, புடைவைகள், தளபாடங்கள் சையிக்கிள்கள் நாசப்படுத்தப்பட்டன.

பீற்றர் தேவராசன் என்பவரதும் கதிரித்தம்பி செல்வராசா என்பவரதும் வீடுகளும் இவற்றுள் அடங்கும்.

அச்சக உரிமையாளரான ஒருவருடைய கார் ஒன்றும் எரிக்கப்பட்டது. வீடுகளில் இருந்த ரீ.வி. டெக் போன்ற பெறுமதியான பொருள்களுடன் 65 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஓர் இடத்தில் பாகற் கொடிக்குள் மறைந்து நின்று இராணுவத்தினர் சுட்டபோது பலர் காயம் அடைந்தனர்.

'குத்தகை' என்று அழைக்கப்படும் கதிராமுகந்தவனம் (65 வயது) என்ற விவசாயியும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

முத்துமாரி அம்மன் கோவிலடி (குப்பிளான் வீதியில்) க்கு அண்மையிலும் ஏழாலை வடக்கிலும் மதில்கள் கவச வாகனங்களால் இடித்து விழுத்தப்பட்டன.

வழியில் வீதியோரத்தில் இருந்த வீடுகளின் கண்ணாடிகள் கல்வீச்சினாலும் துவக்குகளால் அடித்தும் நொருக்கப்பட்டன.

சுமார் 100 வீடுகள் இவ்வாறு சேதம் அடைந்தன. குரும்பசிட்டியில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்கும் பல வீடுகள் சேதமாக்கப்பட்டன.

ஏழாலையிலுள்ள இயக்க முகாம் ஒன்றை இவர்கள் தேடிச் சென்றனர் என்று கூறப்படுகின்றது முகாமோ அல்லது போராளிகளோ அல்லது ஆயுதங்களோ கைப்பற்றப்படவில்லை.

தோலகட்டி தயாரிப்புகளின்
மாற்றப்பட்ட புதிய விலை விவரங்கள்
ஜனவரி 10 ஆம் திகதிமுதல்
அமுலுக்கு வந்தவை

| | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| நெல்லிரசம் | 20 – 50 | 23 – 50 |
| முந்திரிகை ரசம் | 24 – 50 | 27 – 50 |
| மாதுளம் ரசம் | 35 – 00 | 40 – 00 |
| நன்னாரி ரசம் | 28 – 00 | 32 – 00 |
| மருத்துவ வைன் | 60 – 00 | 72 – 50 |
| மேசை வைன் | 45 – 00 | 52 – 50 |
| தேசிக்காய் ஊறுகாய் | 15 – 00 | 18 – 00 |
| மாங்காய் ஊறுகாய் | 14 – 00 | 17 – 00 |
| அச்சாறு | 12 – 00 | 15 – 00 |

மேற்குறிப்பிட்ட விலை விவரங்களை வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், வியாபாரிகள் தயவு செய்து கவனிக்கவும்.

ஆதரவிற்கு நன்றி

ஏகப் பிரதிநிதிகளும் விநியோகஸ்தர்களும்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்.

தோலகட்டி தயாரிப்புகள்
செபமாலை தாசர் சபை
வயாவிளான்.

கூட்டுறவு வைத்தியசாலை
யாழ்ப்பாண ப. நோ. கூ. சங்கம்
திறப்பு விழா ஒத்திவைப்பு

இம்மாதம் 19-ந் திகதி மேற்படி வைத்தியசாலை திறப்பதாக ஏற்கனவே விளம்பரப் படுத்தியிருந்தோம். நாட்டின் தற்போதைய நிலைமை சீரில்லாததால் மேற்படி திறப்பு விழா பின்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பொது முகாமையாளர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 18-01-1986.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org